**The Karur Vysya Bank Limited**
Regd. & Central Office, Erode Road, Karur - 639 002.
**CIN No: L65110TN1916PLC001295**
e-Mail: kvbshares@kvbmail.com Website: www.kvb.co.in
Tel No: 04324 - 269441 Fax No: 04324 - 225700

# அறிவிப்பு

நிகழும் 2018-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 09-ம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு, கரூர் வைஸ்யா வங்கியின் 99-வது வருடாந்திர மகாசபை கூட்டம், ஈரோடு சாலை, கரூர் - 639 002-ல் அமைந்துள்ள வங்கியின் பதிவு மற்றும் மத்திய அலுவலகத்தில் நடைபெறும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது .

இந்திய நிறுமங்கள் சட்டம் 2013, பிரிவு 101 மற்றும் நிறுமங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, பிரிவு 18-ன் படியும், இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR 2015)-ன் 36-வது கட்டுப்பாட்டின் படியும், மின்னஞ்சல் முகவரியினை முதலீட்டு பங்கேற்பாளரிடமோ(DP), வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரிடமோ (RTA) அல்லது வங்கியிடமோ பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மகாசபை கூட்டத்திற்கான அறிவிப்பும், 2017-18-ம் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. மின்னஞ்சல் முகவரியினை பதிவு செய்யாதவர்களுக்கும், வங்கியின் ஆண்டறிக்கையை புத்தக வடிவில் கோரியவர்களுக்கும் 2017-18ம் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் மகாசபை கூட்டத்திற்கான அறிவிப்பு ஆகியவை உறுப்பினர்களின் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்திய நிறுமங்கள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் நிறுமங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) திருத்தப்பட்ட விதிகள் 2015, பிரிவு 20-ன் படியும், இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR 2015)-ன் 36-வது கட்டுப்பாட்டின் படியும், மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீது தொலைதூர மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியினை, தேசிய பங்குகள் வைப்பு நிறுவனத்தின் (NSDL) வாயிலாக வங்கி ஏற்பாடு செய்துள்ளது. இந்த வசதியினை பயன்படுத்தி மகாசபை கூட்ட அறிவிப்பில் உள்ள ஏதேனும் ஒருசில தீர்மானங்களுக்கோ அல்லது அனைத்து தீர்மானங்களுக்குமோ வங்கியின் உறுப்பினர் பதிவேட்டில் 02.08.2018-ம் நாளன்று, அலுவல் நேர முடிவில், வங்கியின் உறுப்பினர் பதிவேட்டில் பட்டியலில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் வாக்களிக்கலாம். தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையானது பின்வரும் கால அட்டவணைப்படி நடைபெறும்:

| | | |
|---|---|---|
| தொலைதூர மின்னணு வாக்களிப்பு | தொடங்கும் நாள் மற்றும் நேரம் | 04.08.2018 காலை10.00 மணி |
| | முடியும் நாள் மற்றும் நேரம் | 08.08.2018 மாலை 05:00 மணி |

வங்கியின் உறுப்பினர் பதிவேட்டில் 02.08.2018 ம் தேதியின் அலுவல் நேர முடிவில் வங்கியின் உறுப்பினர் பதிவேட்டில் பட்டியலில் உள்ள உறுப்பினர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையிலோ, அஞ்சல் வாக்கு சீட்டின் மூலமாகவோ அல்லது மகாசபை கூட்டம் நடைபெறும் நாளன்று பின்பற்றப்படும் நடைமுறையிலோ வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் ஆவர்.

தொலைதூர மின்னணு வாக்களிக்கும் முறையினை பயன்படுத்தி வாக்களிக்க இயலாதவர்கள் அஞ்சல் வாக்குசீட்டு மூலமாக வாக்களிக்கலாம். தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை, அஞ்சல் வாக்கு சீட்டு முறை ஆகிய இரண்டு முறைகளிலும் வாக்களிக்காதவர்கள் மகாசபை கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கலாம்.

வங்கி உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு:

1. தேசிய பங்குகள் வைப்பு நிறுவனத்தின் (NSDL) வாயிலாக நடைபெறும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையானது 08.08.2018 அன்று மாலை 5.00 மணியளவில் நிறைவு பெறும். தீர்மானத்தின் மீது ஒருமுறை செலுத்தப்படும் வாக்கு மீண்டும் மாற்றதக்கதல்ல.
2. சுய விலாசமிட்ட முன்செலுத்திய அஞ்சல் உறையை பயன்படுத்தி அஞ்சல் வாக்கு சீட்டு முறையில் வாக்களிக்கும் உறுப்பினர்களது வாக்குகள் 08.08.2018 அன்று மாலை 5.00 மணிக்கு முன்பாக பரிசீலனை அதிகாரியின் விலாசத்திற்கு சென்றடைய வேண்டும். அதன் பின்பு பெறப்படும் வாக்குகள் அனைத்தும் செல்லாத வாக்குகளாக கருதப்படும்.
3. தொலைதூர மின்னணு வாக்களிக்கும் முறை அல்லது அஞ்சல் வாக்கு சீட்டு முறை ஆகியவற்றில் ஏதேனும் ஒரு முறையை மட்டுமே பயன்படுத்தி வாக்களிக்கலாம். ஒருவேளை, ஒரு உறுப்பினர் இரண்டு வழிமுறைகளையும் பயன்படுத்தி வாக்களித்திருப்பாரேயானால், தொலைதூர மின்னணு வாக்கினை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு அஞ்சல் வாக்கு சீட்டு மூலமாக செலுத்தப்பட்ட வாக்கு நிராகரிக்கப்படும்.
4. தொலைதூர மின்னணு வாக்களிக்கும் முறையிலோ, அஞ்சல் வாக்கு சீட்டு முறையிலோ தங்களது வாக்கினை செலுத்திய உறுப்பினர்களும், மகாசபை கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால் மகாசபை கூட்ட நாளன்று நடைபெறும் மின்னணு முறையிலான வாக்கெடுப்பில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். அதாவது, தொலைதூர மின்னணு வாக்களிக்கும் முறையிலோ, அஞ்சல் வாக்கு சீட்டு முறையிலோ தங்களது வாக்கினை செலுத்தாத உறுப்பினர்கள் மட்டுமே மகாசபை கூட்ட நாளன்று நடைபெறும் மின்னணு முறையிலான வாக்கெடுப்பில் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள். மகாசபை கூட்ட நாளன்று நடைபெறும் மின்னணு முறையிலான வாக்கெடுப்பு, தொழில்நுட்ப கோளாறு காரணமாகவோ அல்லது வேறு ஏதாவது காரணத்தாலோ தடைபட நேரிடும் பட்சத்தில், வாக்கு சீட்டு முறையில் உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.
5. மகாசபை கூட்ட அறிவிப்பு அனுப்பபட்ட நாளுக்கும் 02.08.2018-ம் நாளன்று அலுவல் நேர முடிவுக்கும் இடையில் வங்கியின் பங்குகளை வாங்கியதன் மூலமாக உறுப்பினரானவர்கள், தொலைதூர மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான பயனர்பெயரையும் (Login ID), கடவுச்சொல்லையும் (Password), kvb_sig@kvbmail.com அல்லது info@skdc-consultants.com அல்லது evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்து பெற்று கொள்ளலாம்.
6. மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பு நடைமுறையானது வெளிப்படைத்தன்மையுடனும் உண்மையாகவும் நடப்பதற்கு ஏதுவாக திரு. சோலையப்பன், பட்டயச் செயலர், சேலம் அவர்களை பரிசீலனை அதிகாரியாக வங்கியின் இயக்குநரவை நியமித்துள்ளது.
7. இந்திய நிறுமங்கள் சட்டம் 2013, பிரிவு 91 மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் படியும், இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள் (SEBI LODR), 2015-ன் 42-வது கட்டுப்பாட்டின் படியும், ஈவுத்தொகை பெற தகுதியான பங்குதாரர்களை அடையாளம் காணும் பொருட்டு, வங்கியின் உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகம் 13.07.2018 முதல் 16.07.2018 வரை மூடப்பட்டது. ஈவுத்தொகை தொடர்பான தீர்மானம் மகாசபை கூட்டத்தில் ஒப்புதல் பெறப்படும் பட்சத்தில், 12.07.2018-ம் தேதியின் அலுவல் நேர முடிவில் வங்கியின் உறுப்பினர் பதிவேட்டில் பட்டியலில் உள்ள உறுப்பினர்களுக்கு 10.08.2018 தேதியிலிருந்து 16.08.2018 தேதிக்குள்ளாக ஈவுத்தொகை அளிக்கப்படும்.
8. வங்கியின் மகாசபை கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கை ஆகியவற்றை வங்கியின் இணையதளமான www.kvb.co.in-ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேற்கண்ட ஆவணங்கள் வங்கியின் பதிவு மற்றும் மத்திய அலுவலகத்தில் மகாசபை கூட்ட நாளான 09.08.2018 வரை அனைத்து அலுவல் நாட்களிலும் காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை உறுப்பினர்களின் ஆய்வு மற்றும் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும்.
9. தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை தொடர்பான சந்தேகங்கள் மற்றும் குறைகள் ஏதேனும் இருப்பின் உறுப்பினர்கள், திரு. விஸ்வா சாய் Y, மேலாளர், கரூர் வைஸ்யா வங்கி, முதலீட்டாளர்கள் தொடர்பு பிரிவு (Investor Relations Cell), கரூர் - 639 002 (தொலைபேசி எண்: 04324-269431; மின்னஞ்சல்: kvb_sig@kvbmail.com) அவர்களையும் அல்லது திரு. ஜெய குமார். K, மேலாளர், எஸ்கேடிசி கன்சல்டன்ட்ஸ், பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர், (அலகு: கரூர் வைஸ்யா வங்கி) 1391/A -1, 3வது தளம், கணபதி டவர்ஸ், கணபதி, கோயமுத்தூர் - 641 006 (தொலைபேசி எண்: 0422 - 2539835, 836; மின்னஞ்சல் : info@skdc-consultants.com) அவர்களையும் தொடர்பு கொள்ளலாம்.
10. www.evoting.nsdl.com என்ற வலைப்பக்கத்தில் உள்ள தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறைக்கான பயனர் கையேடு (user manual) மற்றும் வழக்கமாக கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்களின் தொகுப்பு (FAQ), கட்டணமில்லா அழைப்பு எண் 1800-222-990 போன்றவற்றின் மூலமாகவோ அல்லது Ms.Pallavi Mhatre, Asst. Manager, NSDL, 4th Floor, "A' Wing, Trade World, Kamala Mills Compound, Senapati Bapat Marg, Lower Parel, Mumbai – 400 013. Ph: 022-24994545, evoting@nsdl.co.in என்ற முகவரியை தொடர்புகொள்வதன் மூலமாகவோ தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை தொடர்பான மேலதிக தகவல்களை உறுப்பினர்கள் பெறலாம்.

ஸ்ரீனிவாசராவ்
கம்பெனி செயலாளர்
கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

இடம் : கரூர்
தேதி : 16.07.2018